**ஹபுதளை நகர சபை**
**பதுளை மாவட்டம்**

---

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்**

2016 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2017 மார்ச் 23 இலும் முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2016 மார்ச் 21 இலும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் 2016 ஆம் ஆண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2017 யூலை 31 இல் சபையின் செயலாளருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இவ்வறிக்கையின் 1.3 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் ஏற்படுத்தும் தாக்கங்களைத் தவிர்த்து, ஹபுதளை நகர சபையின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறான பெறவேண்டிய நீதிமன்ற தண்டப்பணங்களின் பெறுமதி ரூபா 59,546 ஆல் நிதிக்கூற்றுக்களில் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.

(ஆ) நகர சபைக்குச் சொந்தமான வியாபார கடைகளிற்காக செலுத்த வேண்டிய மின்சாரப் பட்டியல் தொடர்பான ரூபா 64,316 தொகையான கடன்கொடுத்தோர்களிற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(இ) 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிர்மாண வேலை தொடர்பாக செலுத்தவேண்டிய ரூபா 96,214 தொகையான கடன்கொடுத்தோர்களிற்கான ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஈ) ரூபா 53,340 இறுதி காகித இருப்புகளிற்காக கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(உ) 2016 ஆம் ஆண்டிற்கான முத்திரைக் கட்டணங்கள் தொடர்பாக பெறவேண்டிய வருமானம் ரூபா 27,174 ஆல் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.

(ஊ) 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ரூபா 60,183 பெறுமதியான உத்தியோகத்தர்கள் பிணை வைப்புக்கள் நடைமுறைப்பொறுப்புக்களாக காட்டப்பட்டிருக்கவில்லை.

(எ) 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பெறவேண்டிய வீதங்கள் மற்றும் வரிகள் ரூபா 34,126 ஆல் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.

(ஏ) முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் திருத்தப்பட்டிருக்கவில்லை.

(i) ரூபா 183,000 பெறுமதியான 11 அலுவலக உபகரணமானது கணக்கிடப்பட்டிருக்கவில்லை.

(ii) நகரசபைக்கு ரூபா 17,649,179 பெறுமதியான ஜேசீபி லோடரை ஏற்றியிறக்குகையில் ஏற்பட்ட ரூபா 44,430 தொகையான செலவினம் மூலதனமாக்கப்படாமை

### 1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட கணக்கு மீதிகளிற்கும் உரிய பட்டியல்களில் காட்டப்பட்ட நேரொத்த மீதிகளையும் ஒப்பிடும் போது ரூபா 82,324 வித்தியாசம் வெளிப்படுத்தப்பட்டிருந்தது.

### 1.3.3 பெறவேண்டிய மற்றும் செலுத்தவேண்டிய கணக்குகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறான பெறவேண்டிய கணக்குகளின் பெறுமதி ரூபா 11,755,779 ஆகவிருந்த அதேநேரம் செலுத்தவேண்டிய கணக்குகளின் பெறுமதி ரூபா 26,460,137 ஆகவிருந்தது.

### 1.3.4 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

ரூபா 33,976 பெறுமதியான ஆறு காலங்கடந்த வைப்புக்கள் கணக்காய்வில் திருப்திகரமாக சான்றுறுதிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

### 1.3.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

கணக்காய்வில் அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமைகச் சந்தர்ப்பங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கிடையிலான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|
| (அ) நகர சபைகள் கட்டளைச் சட்டம் | |
| (i) அத்தியாயம் 255 இன் 72, 73 மற்றும் 74 ஆம் பந்தி | 13 அங்கீகரிக்கப்படாத நிர்மாணங்களிற்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) 1982 இன் 4 ஆம் இலக்க நகர அபிவிருத்தி அதிகாரசபையின் அதிகாரச்சட்டத்தின் அத்தியாயம் 255 இன் 74(ஆ) மற்றும் 77 ஆம் பந்தி மற்றும் 8அ(1) மற்றும் 28(அ)03 ஆம் பிரிவு | ஹப்புத்தளை மஹிகறபுற 163/3 ஆம் இலக்கத்திலுள்ள பொழுதுபோக்கு சுற்றுலா ஹொட்டலின் மூன்றாம் மாடி மற்றும் வலிம லேலா வீதியிலுள்ள லில்லி ஓய்வூதிய சுற்றுலாக் ஹொட்டலின் மூன்றாம்மாடி சபையின் அனுமதியில்லாமல் நிர்மாணிக்கப்பட்டிருந்தது. |
| (iii) 255 ஆம் அத்தியாயத்தின் 153 ஆம் பிரிவு | சபையின் அங்கீகரிக்கப்பட்ட பிரதேசத்திலுள்ள முச்சக்கர வண்டி போக்குவரத்து சேவைகள் தொடர்பில் சட்டத்தினை உருவாக்குவதன் மூலம் 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டின் போது வருமானத்தை உழைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (iv) நகரசபை அதிகாரச்சட்டத்தின் 180(1) ஆம் பிரிவு | ஹப்புத்தளை நகர சபையானது 2013, 2014, 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளிற்கான நிர்வாக அறிக்கைகளை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் 571 | 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ரூபா 98,757 பெறுமதியான 19 காலங்கடந்த வைப்புக்களை இல்லாமல் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | |
|---|---|---|
| (இ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவையின் XXIV ஆம் அத்தியாயத்தின் 1.6 மற்றும் 4 ஆம் பிரிவுகள் | ரூபா 63,826 கூட்டுத்தொகையான உத்தியோகத்தர்கள் கடன்களானது சேவையிலிருந்து மாற்றஞ்செய்யப்பட்ட அல்லது வறிதாக்கப்பட்ட மற்றும் மரணமடைந்த உத்தியோகத்தர்களான 22 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் 2015 திசெம்பர் 31 ஆந் திகதிய 1944/24 ஆம் இலக்க வர்த்தமானி | சா.எப்.எம். வானொலியால் காட்சிப்படுத்தப்பட்ட விளம்பரப் பலகை சார்பில் ரூபா 27,320 தொகை குறைவாக அறவிடப்பட்டிருந்தது. |
| (உ) | உள்ளூராட்சி ஆணையாளரின் 1980 திசெம்பர் 31 ஆந் திகதிய 1980/46 ஆம் இலக்க சுற்றறிக்கை | வியாபார கடைகளின் குத்தகை வாடகை சபையால் தானாக தீர்மானிக்கப்பட்டதுடன் முறையான மதிப்பீடு இல்லாமல் குத்தகை அடிப்படையில் வழங்கப்பட்டது. |

## 2. நிதிசார் மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2016 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 5,629,876 ஆகக் காணப்பட்டதுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 7,032,835 ஆகக் காணப்பட்டது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 வருமான சேகரிப்பிலுள்ள செயலாற்றல்

(அ) 2016 சனவரி 31 இல் உள்ளவாறு நிலுவையாகவிருந்த வருமானத்தை 2016 திசெம்பர் 31 அளவில் அறவிடுவதன் மீதான செயன்முன்னேற்றமானது 18 சதவீதத்திலிருந்து 65 சதவீத வீச்சிலிருந்ததுடன் அறவிடவேண்டிய தொகை ரூபா 2,053,753 ஆகவிருந்தது.

(ஆ) 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பட்டியலிடப்பட்ட வருமானத்தின் அறவீட்டுச் செயன்முன்னேற்றம் 27 சதவீதத்திலிருந்து 35 சதவீத வீச்சிலிருந்ததுடன் அறவிட வேண்டிய தொகை ரூபா 1,821,265 ஆகவிருந்தது.

#### 2.2.2 ஏனைய வருமானம்

(அ) 1999 இலிருந்து 2007 வரையிலான காலப்பகுதி தொடர்பான ரூபா 4,088,907 தொகையான ஓய்வு வீட்டு வாடகை நகர அபிவிருத்தி அதிகார சபையிடமிருந்து அறவிடவேண்டியிருக்காததுடன் சபையின் நிதியத்திலிருந்து செலுத்தப்பட்ட ரூபா 74,824 மின்சாரக் கட்டணங்கள் 2016 திசெம்பர் வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ஆ) இறைச்சி மற்றும் மீன்கடைகள் தவிர்ந்தவற்றிலிருந்தான ரூபா 2,319,485 வாடகை 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவையாகவிருந்ததுடன் சட்ட நடவடிக்கை எடுத்த பின்னர் வியாபாரக் கடைகளை ஏற்பதற்கோ நீண்டகால நிலுவையாகவுள்ள தொகைகளை அறவிடுவதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) இறைச்சி மற்றும் மீன்கடைகளை குத்தகை அடிப்படையில் பெற்ற நபர்களிடமிருந்து ரூபா 1,391,691 தொகையொன்று 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சபைக்கு கிடைக்கவேண்டியிருந்தது.

(ஈ) 2016 திசெம்பர் 31 அளவில் சபையின் அதிகார எல்லையில் மேற்கொள்ளப்பட்ட வணிக நடவடிக்கை தொடர்பில் துரித அளவை மேற்கொள்ளப்பட்டிருக்காததுடன் ரூபா 30,000 வியாபார அனுமதிப்பத்திர வருமானம் கொழும்பு வீதியிலுள்ள மொத்த வியாபார சந்தையிலுள்ள 30 கடைகளிலிருந்து அறவிடப்பட்டிருக்கவில்லை.

### 2.2.3 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

மாகாண சபையிடமிருந்து 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 338,612 தொகையான நீதிமன்ற தண்டப்பணம் ரூபா 623,434 தொகையான முத்திரைக் கட்டணங்கள் அறவிடப்பட்டிருக்கவில்லை.

## 3. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 3.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

பாதீடானது மீளாய்வாண்டிற்கான வருமான மற்றும் செலவின முகாமைத்துவ கட்டுப்பாட்டின் வினைத்திறனான கருவியாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

### 3.2 வருடாந்த பெறுகைத் திட்டம்

மீளாய்வாண்டின் போது வருடாந்த பெறுகைத் திட்டமானது அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

### 3.3 உள்ளகக் கணக்காய்வு

2016 ஆம் ஆண்டிற்கான போதியளவு உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

### 3.4 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக்கூட்டம்

கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டம் மீளாய்வாண்டின் போது நடாத்தப்பட்டிருக்கவில்லை.

## 4. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு பகுதிகள் தொடர்பாக சபையின் விஷேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) இருப்புக் கட்டுப்பாடு
(ஆ) நிலையான சொத்துக்கள்
(இ) கணக்கீடு
(ஈ) வருமான நிர்வாகம்